





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# சென்னியோங்கு

*senniyONGu*

# சென்னியோங்கு

## ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த

*சென்னி ஓங்கு*
*தண் திருவேங்கடம் உடையாய்*
*உலகு தன்னை வாழ நின்ற நம்பீ*
*தாமோதரா சதிரா*
*என்னையும் என் உடைமையையும்*
*உன் சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு*
*நின் அருளே புரிந்திருந்தேன்*
*இனி என் திருக் குறிப்பே* [1] [0463]

பறவை ஏறு பரம் புருடா
நீ என்னைக் கைக்கொண்ட பின்
பிறவி என்னும் கடலும் வற்றிப்
பெரும்பதம் ஆகின்றதால்
இறவு செய்யும் பாவக் காடு
தீக்கொளீ இவேகின்றதால்
அறிவை என்னும் அமுதவாறு
தலைப்பற்றி வாய்க் கொண்டதே [2] [0464]

எம்மனா என் குல தெய்வமே
என்னுடைய நாயகனே
நின் உளேனாய்ப் பெற்ற நன்மை
இவ்வுலகினில் ஆர் பெறுவார்
நம்மன் போலே வீழ்த்தமுக்கும்
நாட்டில் உள்ள பாவம் எல்லாம்
சும்மெனாதே கைவிட்டோடித்
தூறுகள் பாய்ந்தனவே [3] [0465]

கடல் கடைந்து அமுதம் கொண்டு
கலசத்தை நிறைத்தாற் போல்
உடல் உருகி வாய் திறந்து
மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன்
கொடுமை செய்யும் கூற்றமும்
என் கோல் ஆடி குறுகப் பெறா
தட வரைத் தோள் சக்கரபாணீ
சார்ங்க வில் சேவகனே [4] [0466]

## சென்னியோங்கு

பொன்னைக் கொண்டு உரைகல் மீதே
நிறமெழ உரைத்தாற் போல்
உன்னைக் கொண்டு என் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்
என் அப்பா என் இருடீகேசா
என் உயிர்க் காவலனே [5] [0467]

உன்னுடைய விக்கிரமம்
ஒன்று ஒழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால்
சுவர்வழி எழுதிக் கொண்டேன்
மன் அடங்க மழு வலங்கைக் கொண்ட
இராம நம்பீ
என்னிடை வந்து எம் பெருமான்
இனி எங்குப் போகின்றதே [6] [0468]

பருப் பதத்துக் கயல் பொறித்த
பாண்டியர் குலபதி போல்
திருப் பொலிந்த சேவடி
என் சென்னியின் மேல் பொறித்தாய்
மருப் பொசித்தாய் மல் அடர்த்தாய்
என்றென்று உன் வாசகமே
உருப் பொலிந்த நாவினேனை
உனக்கு உரித்து ஆக்கினையே [7] [0469]

அனந்தன் பாலும் கருடன் பாலும்
ஐது நொய்தாக வைத்து
என் மனம் தன் உள்ளே வந்து வைகி
வாழச் செய்தாய் எம்பிரான்
நினைந்தென் உள்ளே நின்று நெக்குக்
கண்கள் அசும்பொழுக
நினைந்திருன்தே சிரமம் தீர்ந்தேன்
நேமி நெடியவனே [8] [0470]

# சென்னியோங்கு

பனிக் கடலில் பள்ளி கோளைப்
    பழகவிட்டு
ஓடி வந்தென் மனக் கடலில் வாழ வல்ல
    மாய மணாள நம்பீ
தனிக் கடலே தனிச் சுடரே
    தனி உலகே என்றென்று
உனக் கிடமாய் இருக்க
    என்னை உனக்கு உரித்து ஆக்கினையே [9] [0471]

*தட வரைவாய் மிளிர்ந்து மின்னும்*
    *தவள நெடுங்கொடி போல்*
*சுடர் ஒளியாய் நெஞ்சின் உள்ளே*
    *தோன்றும் என் சோதி நம்பீ*
*வட தடமும் வைகுந்தமும்*
    *மதிள் துவரா பதியும்*
*இட வகைகள் இகழ்ந்திட்டு*
    *என்பால் இடவகை கொண்டனையே* [10] [0472]

*வேயர் தங்கள் குலத்துதித்த*
    *விட்டுசித்தன் மனத்தே*
*கோயில் கொண்ட கோவலனைக்*
    *கொழுங்குளிர் முகில் வண்ணனை*
*ஆயர் ஏற்றை அமரர் கோவை*
    *அந்தணர் தம் அமுதத்தினை*
*சாயை போலப் பாட வல்லார்*
    *தாமும் அணுக்கர்களே* [11] [0473]